DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 303/2023**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | எல்லம்மாள் | Caste | : | |
| Husband Name | : | ரமேஷ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **22.06.2026.**

**PW - 14**

**(**எதிரி ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் விழுப்புரம் மாவட்டம், கல்பட்டு, பள்ளிக்கூட தெருவில் வசிக்கிறேன். அ.சா.11 ஆறுமும் எனது தந்தை. அ.சா.12 அலங்காரம் எனது தாயார். சாட்சி பொன்னியம்மாள் எனது தங்கை. வழக்கில் இறந்துபோன பிரபு எனது தம்பி. ஆஜர் எதிரியை தெரியும். பிரபுவிற்கு சித்ரா என்பவருடன் முதலில் திருமணம் நடந்தது. அவர்களுக்கு 2 பெண்கள் மற்றும் 1 பையன். அவர்களுக்குள் என்ன

பிரச்சனை என்று தெரியவில்லை. சித்ரா பிரபுவை பிரிந்து சென்றுவிட்டார். பின்பு பிரபு எதிரியுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார். என் தம்பி பிரபு இறப்பதற்கு முன்பு முசிறிக்கு அருகே உள்ள செங்கல் சூளையில் வேலை செய்தார். எதிரி ஏற்கனவே திருமணமாகி 3 குழந்தைகள் அவருக்கு இருந்தது. அதனால் பிரபுவை வந்துவிடு என்று கூப்பிட்டோம். எதிரி நல்ல பெண் என்றும் அதனால் எதிரியுடனே இருப்பதாக என் தம்பி எங்களிடம் சொன்னார். நான் அவரிடம் மேற்படி எதிரி ஏற்கனவே முதல் கணவரை அடித்து கொன்றுவிட்டார் என்றும், அதனால் வந்துவிடு என்றும் கூப்பிட்டேன். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு, எதிரி பிரபுவை அடித்து சாகடித்துவிட்டார். எதிரி எங்களுடனே இருந்தார். மேலும், நாங்கள் கேட்டபோது எதிரி நாங்கள் 4 பேர் சேர்ந்து பிரபுவை அடித்து சாகடித்துவிட்டதாக சொன்னார். எதிரியின் 2வது மகள் மேற்படி சம்பவத்தை என்னிடம் சொன்னார். பிரபுவை எங்கு போட்டார்கள் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலிசார் விசாரித்தபோது நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் சொன்னேன். நான் முதல் விசாரணையில் எதிரி ஏற்கனவே முதல் கணவரை அடித்து கொன்றுவிட்டார் என்றும், அதனால் வந்துவிடு என்றும் கூப்பிட்டேன் என்றும், சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு, எதிரி பிரபுவை அடித்து சாகடித்துவிட்டார் என்றும், பிறகு, எதிரி எங்களுடனே இருந்தார் என்றும், மேலும், நாங்கள் கேட்டபோது எதிரி நாங்கள் 4 பேர் சேர்ந்து பிரபுவை அடித்து சாகடித்துவிட்டதாக சொன்னார் என்றும், எதிரியின் 2வது மகள் மேற்படி சம்பவத்தை என்னிடம் சொன்னார் என்றும் சொன்ன விவரங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் அந்த விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த விவரமும் எங்களிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி இறப்பிற்கும்

**எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் தம்பி எப்படி இறந்தார் என்பதே எங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.